**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 45/2021 Date:08.04.2026.**

**(PW1)- செல்வகுமார்**

<u>**1 ஆம் பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் 1 ஆம் வாதி என்றால் சரிதான். நான் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஏ பட்டிகை சொத்து சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. யாருக்கு என்னென்ன சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளது என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

2. நான் ஏ பட்டிகை சொத்து சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்துள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் காட்டமுடியுமா என்றால் காட்டமுடியாது. வாதி எந்த சொத்திற்கு உரிமைதாரர் என்று கூறமுடியாது என்றால் கூறமுடியாது. நான் 10 அடி பாதை பிரதிவாதிகளின் சொத்தில் செல்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதை இருப்பதை காட்டகூடிய வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் எந்த ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை அதனால் என்னால் ஆவணத்தை காட்டமுடியாது என்றால் சரிதான்.

3. எனது நிலம் மற்றும் பிரதிவாதிகளின் நிலம் வருவாய் ஆவணங்களில் எவ்வாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 1,2 ஆம் பிரதிவாதியின் நிலம் சர்வே எண் 501 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 501 சொத்திற்கு கிழக்கு பக்கம் சர்வே எண் 502 அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 502 முழுவதும் வயல் என்றால் சரிதான். மேற்படி வயலுக்கு வரப்பு பாதையாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 501 மற்றும் 502 சொத்திற்கு இடையில் ஒரு நடைவரம்பு உள்ளது என்றால் சரிதான், ஓடையும் உள்ளது. மேற்படி 502 ல் உள்ள வயல்களுக்கு மேற்படி நடைவரம்பு வழியாக தான் செல்லவேண்டும் என்றால்

சரிதான்.

4. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் இருக்கும் போது தான் நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடும் போது சர்வே எண் 500/6,7,19,20, 501/4 ஏ , 501/5,6,4 பி,7 ஆகிய சொத்துகளுக்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்ற ஆணையரிடம் காட்டவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 501 சொத்திற்கு மேற்கு பக்கம் ரோடு செல்கிறது என்றால் சரிதான், 200 மீட்டர் மேற்கே செல்கிறது. சர்வே எண் 501/4 ஏ இருந்து இரண்டு கண்டங்கள் தாண்டி ரோடு செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண் 500/6 க்கு ஒரு கண்டம் தாண்டி ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

5. ரோட்டிற்கு மேற்கு பக்கம் வெங்கடேஸ்வர கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 சொத்தின் உரிமையாளர்களும் மேற்படி ரோடை அடைவதற்கு நடைபாதை உள்ளது என்றால் சரிதான், நடைபாதை கிடையாது அங்குள்ள இடத்தை பாதையாக பயன்படுத்துகிறார்கள். மேற்படி சொத்தின் உரிமையாளர்கள் மேலே குறிப்பிட்ட பாதையை பயன்படுத்தி தான் கோவில் அமைந்துள்ள ரோட்டிற்கு செல்வார்கள் என்றால் சரியல்ல, அங்கு 7 அடி உயரத்திற்கு சுவர் கட்டிவிட்டார்கள் அந்த பாதையை பயன்படுத்த முடியாது.

6. அவ்வாறு எந்த சுவரும் கட்டவில்லை என்றாலும் நான் சுவர் இருப்பதை காட்ட நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆவணம் தாக்கல் செய்துள்ள விபரம் பற்றி தெரியாது. நீதிமன்ற ஆணையர் சர்வே எண் 501/18 ல் தான் பாதை செல்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. வயலுக்கு தெற்கு பக்கம் ரோடு செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண் 501/18 ல் இருந்து இரண்டு வயல்கள் தாண்டியதும் ரோடும் வயலும் சமமான மட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 501/17,18 ரோடில் இருந்து 5 அடி தாழ்வாக உள்ளது என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் கிழக்கு பக்கம் உள்ள வயலில் ஒரே சமயத்தில் இரு போகம் பயிர்யிட்டு அறுவடை செய்வார்கள் என்றால் சரிதான். மேலே குறிப்பிட்ட ரோட்டுடன் சமமான இடத்தில் தான் விவசாயத்திற்கு டிராக்டர் செல்லும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் சர்வே எண் 501/18 வழியாக பாதை செல்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் எனது பிராதில் 10 அடி பாதை இருப்பதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அவ்வாறு பாதை இருப்பதை

காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

8. வருவாய்துறை அதிகாரிகளிடம் நான் எந்தவிதமான ஆவணமும் காட்டாததால் தான் அவர்களால் எந்த நடவடிக்கை எடுக்கமுடியவில்லை என்றால் தெரியாது. சர்வே எண் 501/17 சொத்தை 1 ஆம் பிரதிவாதி 2018 கிரயம் பெற்ற பின்பு இடத்தை பார்வையிட்டு அளவீடு செய்த பின்பு வருவாய்துறை அதிகாரிகளால் அவருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் சொத்தின் விஸ்தீரணம் 4.5 ஏர்ஸ் என்று அவர்து பட்டாவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. ஆனால் நீதிமன்ற ஆணையர் அதை 10.1 செண்ட் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது.

9. நான் தாவா சர்வே எண்ணிற்கான புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. நான் எனது வழக்கு பொய் என்று நிரூபணம் ஆகிவிடும் என்பதால் புல வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. தாவா பாதை 100 வருடத்திற்கு மேல் பயன்பாட்டில் இருப்பதாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, பயன்பாட்டில் தான் உள்ளது. அவ்வாறு 100 வருடம் மேலாக பாதை பயன்பாட்டில் இருந்திருந்தால் புதிய சர்வேயில் துலங்குமென்றால் பாதை வழியாக தான் செல்கிறேன். எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த வழக்கு மூலமும் இல்லை என்றாலும் எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்றாலும் எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் அனுமதிக்கவேண்டும். சர்வே எண் 501/17 வழியாக 1 இன்ச் இடம் கூட பாதையாக பயன்படுத்த படவில்லை என்றால் தெரியாது.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**